## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.

## (அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

**எஸ்.டி.சி.எண்: 1078/2022**

**ம.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **சரவணன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **ஜெயசீலன்** |
| ஊர் | : | **மத்தூர்** |
| வட்டம் | : | |
| ஆதார் எண் | : | |
| தொழில் | : | **பல்பொருள் அங்காடி** |
| மதம் | : | |
| வயது | : | 48 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 09.02.2024.**

**புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

**நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

1. 19.10.2022 **தேதிய லட்சுமி விலாஸ் வங்கி தற்போது** DBS Bank of India limited **மத்தூர் கிளை காசோலை எண்**.000475 **அசல் ம.சா.ஆ**.1 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 20.10.2022 **தேதி எதிரியின் வங்கி கணக்கு முடிக்கப்பட்டு விட்டதாக திருப்பப்பட்ட குறிப்பாணையின் அசல் ம.சா.ஆ**.2 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 09.11.2022 **தேதிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ**.3 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 12.11.2022 **தேதியில் மேற்படி சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ**.4 **ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 22.11.2022 **தேதிய எதிரி தனது வழக்கறிஞர் முலம் அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பின்**

அசல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 29.09.2022 ம் தேதி எதிரி புகார்தாரருக்கும் மற்றும் 5 நபர்களுக்கும் அனுப்பிய சட்ட அறிவிப்பு அசல் ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 13.10.2022 ம் தேதி எதிரியின் சட்ட அறிவிப்பிற்கு புகார்தாரர் தனது வழக்கறிஞர் முலம் அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 14.10.2022 பதில் சட்ட அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. மனுதாரரின் வங்கி பாஸ் புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார். குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.
ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.